# நியாயப் பிரமாணத்தின் படி வாழுதல்




பாடம் 9 ஆகஸ்ட் 30, 2025






"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ
இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது
என்னவென்றால், நான் வானத்திலிருந்து
உங்களோடே பேசினேன் என்று கண்டீர்கள்.
நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே
தெய்வங்களையும் பொன்னினாலே
தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே
வேண்டாம். " யாத் 20:22, 23

பத்துக் கட்டளைகளை அறிவித்த பின்பு, ஜனங்கள் தேவனுக்கும் தங்களுக்கும் இடையில் இடைக் கர்த்தராக இருக்கும்படி மோசேயை கேட்டுக்கொண்டார்கள் (யாத் 20:19). அத்தருணத்திலிருந்து, தேவன் மோசேக்கு சில சட்டத்திட்டங்களை கொடுத்தார், மோசே அதை ஜனங்களுக்கு கொடுத்தார்.





"உடன்படிக்கை குறியீடு" என்று அழைக்கப்படும் இந்த சட்டத்திட்டங்கள், இஸ்ரவேல் மக்களின் வாழ்க்கையை ஒழுங்குப்படுத்தும் நோக்கம் கொண்டவை, எனவே அது நம்முடையதுமாகும் (நமது தற்போதைய யதார்த்தத்திற்கு தேவையான தழுவல்களுடன்).

சுருக்கமாக சொன்னால், அவை, பத்து கட்டளைகளை அன்றாட வாழ்க்கையின் குறிப்பிட்ட நிகழ்வுகளுக்கு நடைமுறை பயன்பாடாக கொண்டுள்ளன.



## கற்பனையின்படி எப்படி வாழ்வது?:

- வன்முறையை எவ்வாறு நிர்வகிப்பது (யாத் 21:1-32)
- சமுதாயத்தில் எப்படி வாழ்வது (யாத் 21:33-23:19)
- எப்படி வெற்றி பெறுவது (யாத் 23:20-33)

## கற்பனையை எப்படி புரிந்துகொள்வது?:

- பழிவாங்கும் சட்டங்கள்.
- வெகுமதி மற்றும் தண்டனை.




# கற்பனையின்படி எப்படி வாழ்வது?




# வன்முறையை எப்படி நிர்வகிப்பது?

"ஒரு மனிதனைச் சாகும்படி அடித்தவன், நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்." (யாத் 21:12)

உடன்படிக்கை குறியீடு எபிரேய சமுதாயத்தின் மூன்று முக்கிய அம்சங்களை ஒழுங்குப்படுத்துவதன் மூலம் தொடங்குகிறது:



1. அடிமைத்தனம் (யாத். 21:2-11)
   - ஏழாம் ஆண்டுக்கு பிறகு ஆண்கள் விடுவிக்கப்பட்டனர்.
   - பெண்கள், திருமணம் செய்யயாமலிருந்தால், அவர்களும் விடுவிக்கப்படுவார்கள்.
   - ஒரு மனிதன் விரும்பினால் அவன் அடிமையாகவே இருக்கலாம்.
2. மரண தண்டனை (யாத். 21:12-17)
   - திட்டமிட்டு கொலை செய்பவனுக்கு
   - பெற்றோரை சபிப்பவருக்கு அல்லது காயப்படுத்துபவர்க்கு
   - கடத்தல்காரனுக்கு
3. காயங்கள் (யாத். 21:18-32)
   - நிதி இழப்பீடு செலுத்தவேண்டிய கடமை
   - கருக்கலைப்பு நடந்தால், நீதிபதியும் பெண்ணும்(அவளது கணவருடன்) அபராதம் விதிக்கலாம்.

இந்த சட்டங்கள் எல்லாம் மக்களிடையே துஷ்பிரயோகம் மற்றும் வன்முறையைத் தடுக்க முயற்சிக்கின்றன.

# சமுதாயத்தில் எப்படி வாழ்வது?


"நியமிக்கப்படாத ஒரு கன்னிகையை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரிசம்கொடுத்து, அவளை விவாகம்பண்ணக்கடவன்.(யாத் 22:16)




தேவன் நமக்கு "அடிப்படை" சட்டங்களை விட்டுவிட்டு, நமக்கு தேவையானபடி அவற்றை பயன்படுத்த அனுமதிப்பதில் திருப்தி அடையவில்லை. அவற்றை நாம் சரியாக பயன்படுத்துவதற்காக அவர் உறுதியான உதாரணங்களை வழங்குவதில் கவனமாக இருந்தார். இந்த உதாரணங்களில் விலங்குகள் மீது விலங்கு தாக்குதல்கள் அடங்கும் (யாத். 21:35-36 ); கடன் கொடுத்தல் மற்றும் வாடகைக்கு விடுதல் (யாத். 22:14-15 ); திருமணத்திற்கு முந்தைய உறவுகள் (யாத். 22:16 ), முதலியன.



பலவீனமானவர்களையும் ஒரங்கட்டப்பட்டவர்களையும் பாதுகாப்பதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது, ஆனால் அவர்களுக்கு நியாயமற்ற சலுகைகளை வழங்காமல் — அதாவது, அவர்களுக்கு நன்மை பயக்கும் அல்லது தீங்கு விளைவிக்கும் வகையில் நீதியை திசைதிருப்பாமல் இருக்க வேண்டும்(யாத். 22:21-23; 23:2-3, 6).







இது தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான உடன்படிக்கையாக இருப்பதால், இந்த கட்டளைகள் நாம் அவருடன் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதையும் உள்ளடக்கியது. ஓய்வுநாட்களின் ஓய்வை தவிர, பாவத்திலிருந்து நமது விடுதலை, தெய்வீக பாதுகாப்பு மற்றும் நமக்காக காத்திருக்கும் மகிமையான எதிர்காலத்தை நினைவூட்டும் பண்டிகைகளை கடைபிடிக்க வேண்டிய கடமை இருந்தது.

# வெற்றி பெறுவது எப்படி?

“வழியில் உன்னைக் காக்கிறதற்கும், நான் ஆயத்தம்பண்ணின ஸ்தானத்துக்கு உன்னைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதற்கும், இதோ, நான் ஒரு தூதனை உனக்கு முன்னே அனுப்புகிறேன்.” (யாத் 23:20)

**கானானியர்களின் இராஜ்யத்தை ஏன் தேவன் ஆபிராகாமுக்கு கொடுக்கவில்லை? “ஏனென்றால் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை.” (ஆதி. 15:16).**

**நான்கு நூற்றாண்டுகள் கருணைக்கு பிறகும், கானானியர்கள் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளவில்லை. இஸ்ரவேலரிடம் நிலத்தை ஒப்படைக்க வேண்டிய நேரம் இது... அமைதியாக! (யாத். 13:17)**

**தேவன் அவர்களை எகிப்திலிருந்து போர் செய்யாமலேயே வெளியே கொண்டு வந்திருந்தால், கடலை இரண்டாக பிரிந்திருந்தால், அற்புதமாக அவர்களுக்கு உணவளித்திருந்தால், தம்முடைய தேவதூதர்களை கொண்டு அவர்களை வழிநடத்தியிருந்தால்... அவர்கள் அதற்காகப் போர் செய்யாமலேயே கானானை கொடுக்க அவரால் முடியாதா?**










**இஸ்ரவேலர்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் கூறுகிறார்?**

- தேவனுடைய சத்தத்தை கேளுங்கள், உங்களுடைய சத்துருக்களுக்கு அவர் சத்துருவாயிருப்பார் (23:21-22)
- தேவனுக்கு மட்டுமே சேவை செய்யுங்கள், அப்போது அவர் எல்லா நோய்களையும் நீக்குவார்(23:24-26)
- கானானியர்களுடன் எந்த உடன்படிக்கையையும் செய்யாமல், அவர்களுடைய தெய்வங்களை வணங்காமல் இருக்க வேண்டும்(23:32-33)

**தேவன் தாம் என்ன செய்யப் போகிறார் என்று இஸ்ரவேலர்களுக்கு கூறுகிறார்?**

- அவர்களை பாதுக்காக்கவும், அவர்களை பாதுகாப்புக்குள் கொண்டு வரவும் அவர் தம்முடைய தூதனை அனுப்புவார்(23:20)
- தேவதூதன் அவர்களுக்கு முன்பாக சென்று அவர்களை கானானுக்கு அழைத்து செல்வார் (23:23)
- அவர் அந்த குடிமக்களுக்கு பயங்கரத்தை அனுப்புவார் (23:27)
- அவர்களை விரட்ட அவர் குளவிகளை அனுப்புவார்(23:28)
- அவர் அவர்களை படிப்படியாக விரட்டுவார்(23:29-30)
- மத்திய தரைக்கடல் முதல் ஐபிராத்து நதிவரை அவர்கள் ஆதிக்கம் செலுத்தும்வரை அவர் அவர்களை இஸ்ரவேலரிடம் ஒப்படைப்பார் (23:31)




# கற்பனையை புரிந்து கொள்வது எப்படி?



# பழிவாங்கும் சட்டங்கள்

"கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்," (யாத் 21:24)

இயேசு மலைப்பிரசங்கத்தை வழங்கிய போது, பழிவாங்கும் சட்டத்தை ஒழித்தார்(மத். 5:38-42) ... இல்லையா?



"சொல்லப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்... ஆனால் நான் உங்களுக்கு சொல்கிறேன்" என்ற வாக்கியம் நியாயப்பிரமாணத்தை ஒழிக்கவில்லை ("கொலை செய்யாதே" அல்லது "விபச்சாரம் செய்யாதே" என்பதற்கும் அதே சொற்றொடரை இயேசு பயன்படுத்தினார். ஆனால் அவர் அவற்றை ஒருபோதும் ஒழிக்க விரும்பவில்லை). உண்மையில், இயேசு எப்போதும் நியாயப்பிரமாணத்தை விரிவுப்படுத்தினார், மேம்படுத்தினார், அதற்கு அதன் உண்மையான அர்த்தத்தை கொடுத்தார்.

ஒரு நபர் மற்றொருவருக்கு தீங்கு விளைவித்ததற்காக தனது கண்ணையோ அல்லது கையையோ இழக்கவேண்டும் என்பது வழிவாங்கும் சட்டத்தின் உண்மையான நோக்கமாக ஒருபோதும் இருக்கவில்லை.






பழிவாங்குதலை தடுப்பது, இரத்தகளரி சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது மற்றும் முன் விசாரணை இல்லாமல் பழிவாங்குவதை தடுக்கும் நோக்கத்துடன் இந்த சட்டம் உருவாக்கப்பட்டது. சேதங்களை நீதிபதிகள் மதிப்பிட வேண்டும், பின்னர் பொருத்தமான பண இழப்பீடு நிறுவப்பட்டு வழங்கப்படும். மக்கள் தங்கள் கைகளில் நீதியை எடுத்துக்கொள்வதை தடுக்க இந்த நடைமுறை எழுந்தது. நீதி வழங்கப்பட வேண்டும், ஆனால் தேவனுடைய சட்டத்திற்கும் இணங்க வேண்டும்.

# வெகுமதி மற்றும் தண்டனை

"ஒருவன் பதிவிருந்து கொல்லாமல், தேவச்செயலாய்த் தன் கைக்கு நேரிட்டவனைக் கொன்றால், அவன் ஓடிப்போய்ச் சேரவேண்டிய ஸ்தலத்தை உனக்கு நியமிப்பேன்." (யாத் 21:13)

பழிவாங்கும் எண்ணம் நம்மில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அது நாம் பெற்ற தவறுக்கு எப்போதும் விகிதாசாரமற்றது: "அவன் எனக்கு இதை செய்தால், நான் அவனுக்கு இதைவிட அதிகமாக செய்வேன்."



நாம் விரும்புவதற்கு நேர்மாறாக தீமைக்கு நன்மை செய்யும்படி இயேசு நம்மை அழைக்கிறார்: (மத். 5:44). அப்படியானால் நீதி எங்கே? குற்றவாளிக்கு யார் தகுதியானதை செலுத்துவார்கள்? ஆக்கிமிப்பாளர் தண்டிக்கபடமாட்டார் என்றோ, எந்தவொரு செயலுக்கும் பழிவாஙகப்படுவார் என்றோ தேவன் நமக்கு சொல்லவில்லை. ஆனால் அவர் பழிவாங்குபவர் என்று தெளிவாக சொல்கிறார்(ரோ. 12:19-21).





உடன்படிக்கை குறியிட்டில் தனிப்பட்ட பழிவாங்கல் பொறுத்து கொள்ளப்பட்டாலும், துஷ்பிரயோகத்தை தடுக்க ஒரு நீதித்துறை அமைப்பை உருவாக்குவதன் மூலம் அது கட்டுப்படுத்தப்பட்டது (யாத். 21:12-13, 22; 22:8-9).

நீதிபதி, நடுவர் மன்றம் மற்றும் மரண தண்டனை நிறைவேற்றுபவர் ஆகிய பதவிகளை யாரும் ஒரே நேரத்தில் ஏற்க முடியாது. தண்டனை விதிக்கப்படவேண்டுமானால், அது ஒரு நியாயமான நீதித்துறை செயல்முறை மூலம் செய்யப்பட வேண்டும். மேலும் கிறிஸ்துவே உச்ச மற்றும் இறுதி நீதிபதியாக இருப்பார்.